★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 20 வெள்ளிக்கிழமை (03 - 02 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 68

# கண்காணிப்பு குழுக்கள் அடுத்த வாரம் இயங்கும்

## வெளிநாட்டு பிரதிநிதிகள் நால்வர் ஞாயிறு வருகை

கொழும்பு, பெப்ரவரி 3

தற்பொழுது அமுலில் இருந்துவரும் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்கள் அடுத்த வாரம் கடமைகளை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நால்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந்த பிரதிநிதிகளைச் சந்திக்க தாங்கள் தயாராகவுள்ளதாக புலிகள் இயக்கத்தினர் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவிடம் தெரிவித்துள்ளனர் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

இவர்களின் சந்திப்பைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுக்கள் செயற்படத் தொடங்கும் எனத் தெரியவந்தது.

திருகோணமலை, மணலாறு [வெலிஓயா] பகுதிகளுக்கான கண்காணிப்புக் குழுவுக்கும் மட்டக்களப்பு. அம்பாறை பகுதிகளுக்கான கண்காணிப்புக் குழுவுக்கும் நோர்வேயைச் சேர்ந்த பிரதிநிதிகள் தலைமை வகிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், மன்னார் கண்காணிப்புக் குழுவுக்கு நெதர்லாந்தைச் சேர்ந்த பிரதிநிதியும் —

வவுனியா — முல்லைத்தீவுப் பகுதிக்கான குழுவுக்கு கனடாவைச் சேர்ந்த பிரதிநிதியும் தலைமை வகிக்கின்றனர்.

ஒவ்வொரு கண்காணிப்புக் குழுவிலும் வெளிநாடு ஒன்றைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரும், அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவரும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் அங்கத்துவம் வகிக்கின்றார்கள்.

[ஒ-க-6]

## இலங்கை இனப்பிரச்சினை:

## அரசியல் தீர்வு கோரி ஐ.நாவுக்கு மனுசமர்ப்பிப்பு

வடக்கு கிழக்கில் தமிழர் தாயகம் ஒன்று உள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் —

தமது அரசியல் நிலைப்பாட்டை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் — அமையக் கூடிய ஓர் அரசியல் தீர்வையே இலங்கை இனப்பிரச்சினைக்கு காணவேண்டும்.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள மனிதாபிமான சட்ட நிறுவனம் இவ்வாறு கேட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான ஐ. நா. சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் நேற்று முந்தினம் புதன்கிழமை சமர்பிக்கப்பட்ட மனுவிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இக்கூட்டத் தொடரில் 9 ஆவது அம்சமாக இது இடம் பெற்றுள்ளது —

[ஓ-3]

## நான்கு மீனவர்கள் கைதாகி விடுதலை

### வேலணைக் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 3

மீன் பிடித்துக் கொண்டிருந்த 4 மீனவர்களை கைது செய்த இராணுவத்தினர் பின்னர் அவர்களை விடுதலை செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு வேலணை சாட்டி கடல்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவரை கரைக்கு வருமாறு படையினர் அழைத்ததாகவும்—

அவர்கள் செல்ல மறுத்ததையடுத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—

பின்னர் மீனவர்கள் கரைக்கு சென்றதாகவும்—

படையினர் அவர்களைத் தடுத்து வைத்து விசாரித்து பின்னர் விடுவித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது

நடேசன் ஸ்ரீதரன் (20 வயது), அந்தோனிப்பிள்ளை சின்சான் (21 வயது), அன்ரனி சிறில் (20 வயது), அருளப்பு ஜெசி [14 வயது] ஆகிய மீனவர்களே கைதாகி விடுதலையானவர்கள் ஆவர்.

(இ-3-9)

## மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி

# இந்தியமீன்பிடி இழுவைப் படகுகள் இலங்கை பகுதிக்குள் 'படை எடுப்பு'

குருநகர், பெப். 3

தற்போது அமுலில் இருந்து வரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையில் இந்திய மீன் பிடி இழுவைப் படகுகள் இலங்கைக் கடல் பிராந்தியத்துக்குள் படை எடுக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவுக்கு சமீபமாக உள்ள கடற் பகுதியிலேயே இந்த இழுவைப் படகுகள் பெரும் அளவில் காணப்படுகின்றன.

இந்த இழுவைப் படகுகளினால் இலங்கை மீனவர்களின் வலைகள் பெரும் அளவில் சேதப்படுகின்றன என்றும் —

இழுவைப் படகுகள் இலங்கைக் கடல் பகுதியில் பெரும் அளவு மீன் வகைகளைப் பிடித்துச் செல்கின்றன என்றும்—குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் இலங்கைக் கடல் பிராந்தியத்துக்குள் அத்துமீறி நுழைவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக் கடலுக்குள் வரும் நூற்றுக்கணக்கான இந்திய மீன் பிடி இழுவைப் படகுகளினால் தமக்கு பேரிழப்பு ஏற்படுவதாக வடக்கு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

[இ-51]

## பென்ஷன் கொடுப்பனவு: ஏற்றத் தாழ்வு நீக்கம்

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, பெப். 3

20 வருடம் முதல் 30 வருடம் வரை அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் கொடுப்பனவில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தற்போது 20 வருட சேவையைப் பூர்த்தி செய்வோருக்கு சம்பளத்தில் 80 சதவீத பென்ஷன் வழங்கப்படுகிறது. இதே அடிப்படையிலேயே 29 வருட சேவையைப் பூர்த்தி செய்பவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

ஆனால், 30 வருட சேவையை ஒருவர் பூர்த்தி செய்தால், 90 சதவீத பென்ஷன வழங்கப்படுகிறது.

இந்த ஏற்றத் தாழ்வால் பல அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

அமைச்சரவையின் புதிய முடிவின்படி —

20 வருடம் சேவைக்காலம் என்றால் 80 வீதம் 21 வருடம் என்றால் 81 வீதம், 22

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நோயாளர் கப்பல் சேவைக்கு 'சீ டான்ஸ்'

யாழ்ப்பாணம், பெப் 3

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் கப்பல் சேவையை இம்மாத நடுப்பகுதியில் இருந்து நடத்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக்கப்பல் சேவையை நடத்த ''சீடான்ஸ்'' என்ற கப்பலைப் பெற செஞ்சிலுவைச்சங்க சர்வதேசகுழு ஏற்பாடு செய்து வருவதாக தெரிகிறது.

ஏற்கனவே சேவையில் ஈடு [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வாகன ஓட்டுநர்களுக்கு லைசென்ஸ் வழங்க திட்டம்

## 15 ஆம் திகதி முதல் அலுவலகம் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப். 3

தமிழீழப் பிரதேசத்தில் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) வழங்கும் திட்டம் அமுல் செய்யப்பட உள்ளது. இதற்கான பிரிவு இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் இயங்கும்.

இது சம்பந்தமாக தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் நேற்றுவிடுத்த செய்திக் குறிப்பின் முழு விவரம் வருமாறு:-

கடந்த பல வருடங்களாக தமிழீழப் பிரதேசத்தில் மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுக்கும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை.

அதனால் வீதிகளில் வாகனங்களை ஓட்டும்போது அதற்கான ஒழுங்கு விதிகளைப் பேணுவதில் அசமந்தமான நிலை காணப்படுகிறது.

இந்த இடைக்காலத்தில் பல புதிய வாகன ஓட்டுநர்கள் இத்தொழிலில் இணைந்தும் அவர்களுக்குரிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாமை ஒரு குறைபாடாக இருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நரோமா கப்பல் மூலம் தீவுப்பகுதிக்கு சாராயம்

### திருமலையில் இருவர் கைது!

கொழும்பு, பெப். 3

போலியான உத்தரவுப் பத்திரங்களுடன் பெருந் தொகையான மதுவகைகளை தீவுப்பகுதிக்கு கடத்திச் சென்று விற்பனை செய்து வந்த இரு தமிழ் வியாபாரிகள் திருகோணமலைப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

''நரோமா'' கப்பல் மூலம் இருநூறுக்கு மேற்பட்ட குடிவகை போத்தல்களை எடுத்துச் செல்ல முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு குடிவகைகளை தீவுப் பகுதிக்கு எடுத்துச் செல்ல போலியான அனுமதி பத்திரத்தை வடபகுதி தாக்குதல் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் விமானப் படை அதிகாரி ஒருவரே அவர்களுக்கு வழங்கியுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இது பற்றி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முச்சந்தி முரளி



அப்ப இனி தெருவால கொஞ்சம் பயமின்றிச் செல்லலாம் என்று சொல்லுங்கோ...

## இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப்3

கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ)

## களவாக அகற்றப்பட்ட சிறுநீரகங்கள் சவூதிக்கு!

### இந்தியக்குழு அங்கு செல்லும்

புதுடில்லி, பெப். 3

பெங்களூரில் படிப்பறிவற்ற ஏழைகளிடமிருந்து களவாக அகற்றப்பட்ட சிறுநீரகங்கள் வளைகுடா நாடுகளுக்கு — குறிப்பாக சவூதி அரேபியாவுக்கு விற்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இந்திய விசாரணைக் குழு சவூதி அரேபியா செல்ல உள்ளது.

பெங்களூர் பெரிய மருத்துவ மனை ஒன்றில் இடம் பெற்ற இந்த சிறுநீரகத் திருட்டுத் தொடர்பாக மூன்று டாக்டர்கள் உட்பட நால்வர் கைதாகி இருப்பது தெரிந்ததே. ஐந்தாவது நபரை காவல்துறையினர் தேடிவருகின்

[5ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கு பல்கலை மாணவர் விரிவுரையை பகிஷ்கரிப்பு

கொழும்பு,பெப். 3

மட்டக்களப்பு நகரில் இயங்கும் வந்தாறுமூலைபல்கலைக் கழகத்தின் கலை, வர்த்தகப் பீடங்களை வந்தாறுமூலைக்கு மாற்றுமாறு கோரி அப்பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முன்தினம் முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

வந்தாறுமூலையில் பல்கலைக் கழகத்துக்குரிய சகல வசதிகளும் தற்போது காணப்படுவதால் கலை, வர்த்தகப் பீடங்களை அங்குஇடம் மாற்றுவதால் பல்கலைக்கழகமானதுபூரண வளர்ச்சி அடையுமென அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்

(ஒ)

# சமாதானப் பேச்சை முன்னெடுப்பதில் மிகுந்த ஆர்வமாக இருக்கிறோம்

## செய்தியாளர் மாநாட்டிம் அமைச்சர் தர்மசிறி

கொழும்பு, பெப். 3

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் நாம் ஆர்வமாக இருக்கிறோம். தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

தகவல்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு. தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மகாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த பேச்சுவார்த்தை குறித்து திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆயினும் சமரசப் பேச்சுவார்த்தை குறித்து அரசு உறுதியாகவே உள்ளது.

இரு சாராருமே நான்காவது சுற்றுக்கான பேச்சுவார்த்தைக்கான திகதியை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு பாட விதானம் மாற்றப்படும்

ஜி சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாட விதானம் மாற்றி அமைக்கப்படவுள்ளது.

புதிய பாட விதானம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 1997 ஆம் ஆண்டில் இருந்து அது அமுலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பிரதி உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சுரவீர பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல ஆகிய மூவரும் சேர்ந்து நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

பிரதான வகுப்புகளுக்குரிய பாட விதானங்கள் இனிமேல் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மாற்றப்படும் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

[அ]

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

## 9ஆயிரத்து 13 பேருக்கு புதிதாக அனுமதி

கொழும்பு,பெப் 3

1994-95 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டன.

இதன் அடிப்படையில் பல்கலைக் கழகங்களில் 9ஆயிரத்து13மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்பட இருக்கிறார்கள்

முன்னைய கல்வி ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 303ஆல் அதிகம் ஆகும்.

பரீட்சையின் முடிவுகளின் படி 871மாணவர்கள் மருத்துவத்துறைக்கும்—

635 மாணவர்கள் பொறியியல் துறைக்கும்—

693 மாணவர்கள் உயிரியல்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழ அகதிகளை திருப்பி அனுப்பும் பணி மீண்டும் 27 ஆம் திகதி முதல் ஆரம்பம்

சென்னை. பெப். 3

தமிழ்நாட்டில் முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் வேலைகள் இம்மாதம 27ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப் பட இருக்கின்றன.

இதற்காக மத்திய அரசாங்கம் இரு கப்பல்களை ஒதுக்கியுள்ளது.

தமது சொந்த விருப்பத்தின் பேரில் தாயகம் திரும்ப உள்ள அகதிகளே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும்—

எந்த அகதியும் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் தமிழ் நாட்டின் இறைவரி நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஆணையாளர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

114 முகாம்களில் தங்கியுள்ள 64 ஆயிரத்து 573 அகதிகளில் 6 ஆயிரத்து 489 அகதிகள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள் என்றும் திரு. ரகுபதி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும்

# குருநகர் புதுமை மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா

''தாய்த் திருச்சபையின் பாதையில்
ஆலய திருச்சபையை சீர்செய்வோம்''

## யாழ். புதுமை மாதா ஆலய வரலாற்று குறிப்புக்கள்

யாழ். குருநகர்ப் பகுதியில் கோயில் கொண்டு, அண்டிவரும் அடியார்களுக்கு அருள்மழை பொழியும் புதுமை மாதாவின் புகழும், சிறப்பும் சொல்லிலடங்கா. புதுமை அன்னை கோயில் கொண்டு, குருநகர் பகுதியில் இன்று காணப்படும் ஆலயம் வரலாற்றுப் புகழ் மிக்கதென்பதும், யாழ். நகரில் காணப்படும் ஆலயங்களில் பழமை வாய்ந்ததென்பதும் நல்லூர்ச்சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்து.

இவ்வாலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், அவர்களின் மூதாதையர்கள் கொண்டுள்ள ஆழமான, திடமான விசுவாசத்திற்கு வரலாற்று உண்மைகள் சான்று பகரும். தற்போது குருநகர் பகுதியில் காணப்படும் ஆலயத்திற்கும், யாழ். கோட்டையினுள் 1622 இல் நிறுவப்பட்ட ஆலயத்திற்கும் என்ன தொடர்பு உண்டு என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது என்பது சுவாமி ஞானப்பிரகாசர் கருத்து

### இரண்டு ஆலயங்கள்

ஆயினும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டு இவ்விரு ஆலயங்களுக்கிடையில் சில தொடர்புகள் இருந்ததாக எண்ண இடமுண்டு. ஆரம்பத்தில் வெற்றிமாதா ஆலயம் என்று அழைக்கப்பட்டாலும், அங்குள்ள அன்னையின் சுருபம் (திரு உருவம்) பல புதுமைகள், இடம்பெறக் காரணமாக விளங்கியதால் புதுமை மாதா ஆலயம் என்று மாற்றப்பட்டது. இக்காலப்பகுதியில் கொட்டடியில் (கோட்டைக்கு வட-மேற்கே) வாழ்ந்த கிறிஸ்தவர்களின் வழித் தோன்றல்களே, இப்போதைய புதுமை மாதா ஆலயத்தைப் பராமரிப்பவர்கள் என்பது பாரம்பரியம் கூறும் சான்று.

ஒல்லாந்தர் வருகையுடன், 1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் ஆதிக்கத்திற்குட்பட்டபோது போர்த்துக்கேயர் வெளியேற்றப்பட்டு, கத்தோலிக்கருக்கு இன்னல்கள் அதிகரிக்கப்பட்டன. புதுமைகள் பல புரிந்த அன்னையின் திருஉருவம் கோட்டை ஆலயத்திலிருந்து போர்த்துக்கேயரால் பற்றாவியாவுக்கும், அங்கிருந்து கோவாவிற்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

இத்திருச் சுருபத்தை மீண்டும் பெறுவதற்கு ஓய்வு பெற்ற யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பல முயற்சிகள் மேற்கொண்டும் பயனளிக்கவில்லை.

இந்தப் பின்னணியிலே கொட்டடியில் வாழ்ந்த அதே மக்கள் அவ்வேளையில் காட்டுப் பகுதியாக விளங்கிய குருநகர்ப் பகுதியிலே மறைவாக ஒரு சிறிய கொட்டில் ஆலயத்தை புதுமை மாதா பெயரில் அமைத்தார்கள் என்று பாரம்பரியம் கூறுகின்றது. இதுவே இரண்டு ஆலயத்திற்குமான தொடர்பாகத் தோன்றுகின்றது.

### தற்போதைய ஆலயம்

தற்போதுள்ள ஆலயம் பற்றிய சில குறிப்புக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. 1910 ஆம் ஆண்டு தற்போதைய ஆலயத்தின் கூரை, சுவர்கள், தூண்கள் திருத்தியமைக்கப்பட்டன. ஆலயப் பின்பகுதியில், 1912ஆம் ஆண்டு குருக்கள் தங்குவதற்கான வசதி கொண்ட அறையும் அமைக்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டு ஆலயத்துக்கான சிமெந்து நிலம் போடப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் அருட்திரு போமிக்கோல் அ. ம. தி. பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் ஆலயத்துக்கு அமைவான போட்டிக்கோ கட்டப்பட்டது. இன்றும் அன்றாடம் பல பக்தர்கள் அன்னையின் ஆலயம் தரிசித்து அருள்வளம் பெற்று வாழ்வில் அமைதியும், நிறைவும் பெறுகின்றார்கள்.

அருட்திரு
**ஞா. பிலேந்திரன்**

[பிற்குறிப்பு: இவ்வாலயம் பற்றிய தகவல்கள், ஆவணங்கள் உள்ளோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம்]

## பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழ்மொழியில் ஓர் முதுமொழி இக்கருத்தை தங்கள் வாழ்க்கையின் வழியாகக் கொண்டு எமது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் பரிசுத்த புதுமைமாதா ஆலயத்தை குருநகரிலே கட்டியெழுப்பினார்கள். இந்த ஆலயமானது அவர்களின் கிறிஸ்தவ விசுவாசத்தின் வெளிப்பாடாகவும் புனித மரியன்னையின் மேல் அவர்களுக்கு உள்ள பக்தியையும் இக்காலத்தில் வாழும் எம்மவர்க்கு எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றது.

1995ஆம் ஆண்டின் நவநாட்களும் திருவிழாவும் ஓர் அமைதியான, சமாதானமான சூழ்நிலையில் கொண்டாடப்படுகின்றது என்பது பக்தர்களாகிய எமக்கு பெருமகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அளிக்கின்றது.

சமாதானத்தின் இராக்கினியான பரிசுத்த புதுமை மாதா, அவளின் நவநாட்திருநாட்களில் ஒன்றுகூடும் பக்தர்களாகிய உங்களுக்கு தனது திருமகனாம் கிறிஸ்துவின் சமாதானத்தை அள்ளிச் சொரிவாளாக!

இந்த நன்னாளிலே பக்தர்களாகிய உங்களுக்கு இந் நல்லாசியை அளிப்பதில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

என்றும் மரியன்னையின்,
**R.M.G நேசநாயகம்**
பங்குத் தந்தை


அன்னையின் திருவிழா சிறப்புற நடைபெற உதவிய எல்லா தரப்பினருக்கும் நன்றி கூறுகிறோம்

**P. I. பெர்னாண்டோ**
★ கண்ணாடி வழங்குபவர், பல்கட்டுபவர்
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**மகிழ் இரும்புக் களஞ்சியம் [ஜோய்]**
214, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் வாணிப கூடம்**
234, அர்ச்சுனா வீதி (ஸ்ரான்லி),
யாழ்ப்பாணம்.

**HUMAN**
தொழில்நுட்பவியல் ஆலோசனை நிறுவனம்
305, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**ஒளி அகம் அந்தியகால சேவை**
60, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் கூல்பார்**
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

**சாயி மருத்துவக் கல்லூரி**
10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**D. சேனாதிராஜா**
கண்ணாடி வழங்குதல் பல் கட்டுதல்
4, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



சுன்னாகம், தாளையடி
ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான
புனராவர்த்தன சம்புரோக்ஷண
**மகா கும்பாபிஷேக**
**★ விஞ்ஞாபனம் ★**

கிரியா கால நிகழ்ச்சி விவரம்

**01 - 02 - 95** புதன் மாலை 7 மணி கர்மாரம்பம்
**04 - 02 - 95** சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
எண்ணெய்க் காப்பு சாத்துதல்
**05 - 02 - 95** ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 - 30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம்
★ நடைபெறும். ★

பிரதிஷ்டா குரு:
வேதாகம கிரியாரத்தினம்
பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள்
[ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் தேவஸ்தானம் சுன்னாகம்]

இங்ஙனம்:
ஆதீன கர்த்தாவும்,
திருப்பணிச் சபையும்.

ஐயனார் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

விளம்பர அன்பளிப்பு:
ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கும்
சோ. அருணகிரிநாதன்
சக்தி மருந்தகம்
சுன்னாகம்.
[சி-5774]



**A GENERAL ENGLISH COURSE OF STUDY**

✶ A Thorough BASE
in
★ Spoken English
✶ Written English

COMMENCING ON:
06 — 02 — 1995 4-00 p.m.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd CROSS STREET, JAFFNA.
[C-489]


### நூல் வெளியீடு

வட்டுக் கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினரின் தமிழறிஞர் சரித்திர நூல்வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சித்தன் கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலையில் சங்கத்தலைவர் பண்டிதர் அ. ஆறுமுகம்] தலைமையில் நடைபெறும். [க-14]

### புலிகளின் குரல் வானொலியில்

03 — 02 — 1995
வெள்ளி இரவு

- ★ 8-01 — கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் — அறிமுகமாவது பொம்மைவெளிசிறுவர்போசாக்கு பராமரிப்பு பூங்கா 2 ஆம் ஆண்டு நிறைவு மலர். அதனையடுத்து சிறுகதை சத்தியமூர்த்தி எழுதிய 'எழுகை' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ந. கிருஷ்ணா எழுதிய 'வளமமைத்து வாழ்வோம்'
- ★ 8-25 — கணப்பொழுது க. சிவராசா எழுதிய 'லெப்ரினன்ட் பரமதேவா'
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய 'நம்பிக்கையொளி தோன்றுகின்றது'
- ★ 8-50—வாத்திய கானங்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

04 — 02 — 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வெள்ளி மாலை

- ★ 5-00—ஒலிபரப்பு ஆரம்பம்
- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 —மண்ணின் குரல் 'கால் நடை வளர்ப்பது சுலபம்' தனிநடிப்பு தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- ★ 5-40 — நேயர் கடிதம்
- ★ 5-45 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02—நாடகம் அளவையூரான் எழுதிய 'நடேசவாத்தியார்' தொடர்ந்து என் தெரிவு
- ★ 6-30 — மணிக்கு மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவுபெறும்


யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
கட்டடக் கலைஞர்
(தற்காலிகம்)

**பதவிக்கான விண்ணப்பம்**

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கட்டடக் கலைஞர் பதவி வெற்றிடத்தை தற்காலிக அடிப்படையில் நிரப்பத் தீர்மானித்துள்ளது.

45 வயதிற்கு உட்பட்ட குறிப்பிட்ட பதவிக்குரிய தகைமையுடையோர் தமது விண்ணப்பத்தை 10 - 02 - 1995 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக ''ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 25 - 01 - 95.
]சி-481]



எழுதுமட்டுவாள்
சிறீகணேசா சனசமூக நிலைய
நூலக வளர்ச்சிக்கான
**சீட்டிழுப்பு முடிவுகள்**

**01 - 02 - 1995**

அதிர்ஷ்ட இலக்கங்கள்:
1ஆம் பரிசு இல — **0746**
2ஆம் பரிசு இல — **3169**
3ஆம் பரிசு இல — **4116**

ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள்:
3171 0172 3108
4832 3814

(33500) — நிர்வாகம்.



**P' NEW SCIENCE CENTRE**
எழிலகம் முன், யாழ்ப்பாணம்.

**95 A/L DAY CLASSES**

ஆரம்பம்: **03-02-1995** (இன்று)
வெள்ளி 9-00 a m.

Chemistry Physics
Zoology Botany
Pure App.

★ வகுப்புக்கள் 9 a m — 1.30 p.m வரை நடைபெறும்.
★ விசேட பட்டதாரி ஆசிரியர்களினால் 6 மாதங்களில் முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன ★

—நிர்வாகி.
[சி-490]



**'PRACTICE MAKES ONE PERFECT'**
மாதாந்த பயிற்சி
**வினாத்தாள்கள்**

ஆண்டு 3
கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம்

ஆண்டு 4, 5
கணிதம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், சமயம், சுற்றாடல், சுகாதாரம்.

ஆண்டு 6 7, 8
கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், சுகாதாரம்.

ஆண்டுகள் 9, 10, O/L
கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, சமயம், வர்த்தகம்.

ஆகிய பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. முதலாவது தொகுதி 05 - 02 - 95 வெளியிடப்படும்.

A/L விஞ்ஞான, வர்த்தக, கலை பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன.

நேரடியாகப் பெற முடியாதவர்கள் கடித மூலம் தொடர்பு கொண்டால் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [8334]



ஓம்
விராட் விஸ்வப் பிரம்மணே நம:

**★ திருமண திருமுகம் ★**

அன்புடையீர்!
நிகழும் பவ வருடம் தைத்திங்கள் 21ஆம் நாள் (04 - 02 - 95) சனிக்கிழமை அதிகாலை 6-35 இல் இருந்து 7-06 வரையில் உள்ள சித்தயோகமும் மகரலக்கினமும் கூடிய சுபமங்கள சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன் **சச்சிதானந்தன்** அவர்களுக்கும்
எமது உத்தம புத்திரி **ருக்குமணிதேவி** அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணஞ் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் அனைவரும் தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராய் சமுகமளித்து புதுமண தம்பதிகளை ஆசீர்வதித்து இன்புற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இரண்டாம் நாள் மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்

இங்ஙனம்
✶ இரு வீட்டார் அழைப்பு ✶

திருமதி இராசபாக்கியம்
85, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி காசிப்பிள்ளை
தச்சன்தோப்பு,
கைதடி.
[35006]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபதாவது அகவை காணும் யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி

# 1934 வைர விழாச் சிறப்பு மலர் 1994

(1995 பெப்ரவரி 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் பெருவிழா)

## கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இராமப்புற மாணாக்கர் கல்வி வாய்ப்பிற்காக ஏங்கிய காலகட்டத்தில் 1934 - 10 - 01 ஆம் தேதியன்று ஆரம்பித்து வைத்த இருமொழி ஆரம்பப் பாடசாலையே செங்குந்த இந்துக் கல்லூரியின் ஆரம்பமாகும். இப் பாடசாலை தழைத்துச் செழித்து, கிளை பரப்பி, 1949 இல் செங்குந்த இந்து ஆங்கிலப் பாடசாலையெனப் பெயர் பெற்று, 1959இல் செங்குந்த இந்துக் கல்லூரியாகி ஊரையே குளிர்விக்கின்றது.

அறுபதாண்டு கால இடைவெளியில் இக் கல்லூரி பேணிப் புறந்தந்த சான்றோர் பலர் இலங்கை நிருவாக சேவையுட்பட, பல துறைகளிலும் புகழ் பரப்பியுள்ளமை மெச்சற்பாலதானது, இப் பாரம்பரியம் தொடர்ந்தும் பேணப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

மெய்ப்பொருள் காணும் அறிவைப் புகட்டும் கல்விக் கூடங்கள் தெய்வீகமானவை; போற்றுதற்குரியவை. இக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து, புகழுடன் மிளிர்ந்து, பண்பாளரை கல்விமான்களை பெருக்கியுதவ அருளுமாறு எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றேன்.

**செல்வி தி. பெரியதம்பி**
கல்விப் பணிப்பாளர்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம் – வலயம் 1

## பிரதி கல்வி பணிப்பாளரின் ஆசிச் செய்தி

யாழ்/ செங்குந்தா இந்துக் கல்லூரி தனது அறுபதாவது அகவையைக் கொண்டாடும் இத் தினத்தில் அதன் பாரம்பரியத்தையும், தனித்துவத்தையும் எடுத்துக் காட்டும் முகமாக வெளிவரும் மலருக்கு எனது ஆசிச் செய்தியினை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இருமொழிப் பள்ளிக்கூடமாக இருந்து படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ள இப் பள்ளியானது கடந்த அறுபது ஆண்டுகளாகக் கல்விப் பணிவுடன் சமூகப் பணியையும் ஆற்றி வருவது சகலரும் அறிந்ததே.

இப் பள்ளியில் அதிபர் அவர்களின் சிறந்த ஆளுமைப் பண்பால் தம்முடன் பணியாற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஒரு குடும்பம் போலப் பணியாற்றுவதை அவதானிக்க முடிகிறது. எனவே, இப் பள்ளி தொடர்ந்து முன்னேற்றம் காணவும் பள்ளிச் சமூகம் வேண்டி நிற்கும் விழுமியங்களைப் பேணித் தொடர்ந்து பல துறையிலும் வளர்ச்சியடையவும் வாழ்த்துகின்றேன்.

**சி. புலந்திரன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

## நின்று நிமிர்ந்து வளர்க!

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி தனது அறுபதாவது ஆண்டைப் பூர்த்தி செய்வதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிறிய ஒரு பள்ளிக்கூடமாக தொடங்கப்பட்டு பின் பெரிய கல்வி நிறுவனமாக வளர்ந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களை வாழவைத்த கல்லூரி அது.

செங்குந்த இந்துக் கல்லூரி அன்னை நீண்டகாலம் தொடர்ந்து நின்று நிமிர்ந்து வளர்ந்து தன் பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என வேண்டி ஆசி கூறுகிறேன்.

**இரா. சிவச்சந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

## உள்ளம் உவகைகொள்கிறது

எமது கல்லூரியின் அறுபதாவது அகவையினை பூர்த்தி செய்யும் இன் நாளில் கல்லூரியின் வைர விழா சேவையினை நின்று திறம்பட ஆற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையை எண்ணி அகமகிழ்வதோடு. வரும் காலங்கள் பாடசாலையின் பொன்னான காலங்களாக அமைய எல்லாம் வல்ல பகவானின் ஆசியை இறைஞ்சி நிற்கின்றேன்.

**கார்த்திகேசு சண்முகதாசன்**
பழைய மாணவர் சங்க உறுப்பினர்

## சமர்ப்பணம்

அறுபதாவது அகவையை அடைந்தும் தன் சீரிளமைத் திறன் குன்றாது திருவுடனும் பொலிவுடனும் வீற்றிருக்கும் எமது கல்லூரி அன்னையின் பொற்பாதங்களிலே இம் மலரைச் சமர்ப்பிப்பதில் பெருமிதமடைகின்றோம்... அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் இன்னோரன்ன பணிகள் அனைத்திலும் சிறந்தது. ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற பாரதி பாடலின் உட்பொருளை உன்னிப் பார்ப்போமானால் கல்விப் பசி கொண்டு அலைபவர்களுக்கு அவற்றை வாரி வழங்கும் கல்விக் கூடங்களின் மதிப்பையும் மாண்பையும் காணலாம்.

**பொன். இராசதுரை**
மலர் ஆசிரியர்
வைரவிழா சிறப்பு மலர்

### விழா சிறக்க வாழ்த்துவோர்

- ✶ நல்லூர் வர்த்தக சங்கம்
- ✶ அஜந்தா கலைப்பூங்கா
- ✶ கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே மற்றும் கொழும்பு வாழ் பழைய மாணவர்கள்.

**கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**அனைவரையும்**
**அன்புடன் அழைக்கின்றது**

## கந்த வாச மண்டபத்தில் ஆரம்பமாகி
## கல்லூரியாக வளர்ந்த நிறுவனம்

நல்லூர்இராஜதானியைச் சூழவுள்ள பகுதிகளில் பெருமளவிலே வசித்த செங்குந்த மக்களும் மற்றும் சைவப் பெருங்குடி மக்களும் தமது மக்களுக்கு சைவச் சூழலில் கல்வி புகட்ட முடியாத நிலையை எண்ணி மனம் வெந்து அல்லற்பட்டு, அலமந்திருந்த நேரத்திலே அஞ்சேல் என அபயமளிக்க இரு பெரியார்கள் முன் வந்தனர். அவர்களில் ஒருவர் பிரபல கல்விமானும் சோதிட வித்பன்னரும், செங்குந்த குலதிலகமுமான உயர்திரு. சண்முகம் இளையதம்பி (சாத்திரியார்) மற்றவர் எங்கெல்லாம் சைவப்பிள்ளைகள் சைவப் பின்னணியில் கல்விபெற முடியாமல் அல்லல் படுகிறார்களோ ஆங்கெல்லாம் சைவப் பாடசாலைகளை நிறுவி அவர்கள் துயர் துடைப்பதையே தனது வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டிருந்த 'இந்துபோட் இராஜரத்தினம்' என்று அழைக்கப்பட்ட சைவவித்தியாவிருத்திச் சபையின் முகாமையாளர்.

இவ்விரு பெரியார்களின் கூட்டுமுயற்சியின் பயனாக, இத்தகைய பின்னணியிலே 1934ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி நாளன்று

அச்சுக்கூட மாணிக்கம், நொத்தாரிசு டி. எஸ். கந்தையா, இந்துபோட் இராஜரத்தினம், வைத்திய கலாநிதி கா. பொன்னையா, சபாபதி சங்கரப்பிள்ளை ஆகியோரையும் அவர்களோடு இணைந்து செயற்பட்ட பெரியார்களையும் இவ்வைரவிழா நாளிலே நாம் நன்றியுடன் நினைவு

கூரவேண்டும். இவர்கள் எமது சமூகத்தின் கல்விப் பயிருக்கு கார்மேகமாகியவர்கள்.

நல்லூர் இராஜதானியைச் சூழ வாழ்ந்த செங்குந்த மரபினர் மத்தியில் கந்தபுராண கலாசாரம் எத்துணை ஆழமாக வேரூன்றி இருந்தது

சண்முகதாச வித்தியாசாலை மூடப்பட்ட பின், அடுத்து என்ன செய்யலாம் என இப்பெரியார்கள் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்திலே சட்டசபைத் தேர்தல் வந்தது. அத்தேர்தலில் போட்டியிட்ட 'இந்துபோட் இராஜரத்தினம்' 'நான் இத் தேர்தலில் வெற்றி பெற்றால் இக்கந்த வாச மண்டபத்தை ஒரு இருமொழிப் பாடசாலையாக ஆக்கித் தருவேன்' என கந்த வாச மண்டப முன்றிலில் நின்று வாக்களித்தார். துரதிர்ஷ்டவசமாகஅத்தேர்தலில் அவர் வெற்றிபெற முடியாமல் போனாலும், பாடசாலை நிறுவும் எண்ணத்தை அவர் கைவிடவில்லை. இதன் பயனாக, 1934 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம்1ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று காலை திருவாளர்கள் சி. கந்தையா, ஐயாத்துரை, பண்டிதர் வேதாரணியம், ச. நடராசா, பண்டிதர் சு. இராசையா, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சுவாமிநாதன், பொ. கயிலாசபதி' சி. கந்தசாமி ஐயர் முதலிய பெரியோர்கள் ஆசிகூற தனது பிறவியின் பயனை அன்று தான் அடைந்தது போன்ற பெருமகிழ்ச்சியுடன் இளையதம்பி சாத்திரியார் வாழ்த்துரைக்க, இராஜரத்தினப் பெரியோனால் செங்குந்த இருமொழிப் பாடசாலை கால்கோளாயிற்று. செங்குந்த குலப் பெரியோர்களின் பண உதவிகொண்டு அமைக்கப்பட்ட கந்தவாச மண்டபத்தில் அமைந்த இப்பாடசாலையின் பெயரோடு செங்குந்தா என்ற பெயரும் இணைந்திருக்க வேண்டுமென்பதில் இராஜரத்தினப் பெரியோன் மிக்க ஆர்வம் காட்டினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**சோ. சிவலிங்கராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இளையதம்பி சாத்திரியாரால் உவந்தளிக்கப்பட்ட 'பண்டாரி வளவு' என்ற காணியில் 'இந்துபோட் இராஜரத்தினம்' அவர்களது அனுசரணையுடன் இன்று செங்குந்த இந்துக்கல்லூரி என்ற பெயருடன் அறுபதாவது அகவையை அடைந்து 'வைரவிழா' கொண்டாடும் இக்கல்லூரி, செங்குந்த இருமொழிப் பாடசாலை என்ற பெயருடன் கந்தவாச மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையுடன் அத்தியந்த தொடர்புடையதான கந்தவாச மண்டபத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஈழநாட்டுத் தமிழ்க் கல்வி மரபின் 'நாடி' ஒட்டத்தினைக் கண்டறிய உதவும் சான்று எனலாம். இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இக்கல்லூரி முகையரும்ப வித்திட்ட இறவாப் புகழுடை பெரியோர்களான இளையதம்பி சாத்திரி அக்கல்லூரியின் தோற்றத்துக்கு ஆதி பிதாவாக விளங்கிய சோதிடர், வைத்தியர் இளையதம்பி (சாத்திரியார்). அவரது வலதுகரமென விளங்கிய

என்பதற்கு அவர்கள் அமைத்த கந்தவாச மண்டபமே ஒரு சான்றாகும். இளையதம்பி சாத்திரியாரின் முகாமைத்துவத்தின் கீழிருந்த கொன்றலடி வைரவ சுவாமி கோயிலுக்குச் சொந்தமான 'பண்டாரி வளவு' என்று அழைக்கப்பட்ட காணியில் 1932ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட கந்தவாச மண்டபம் அந்தக் காலத்திலே ஓர் அத்தாணி மண்டபமாக விளங்கியது. கொன்றலடி வைரவ சுவாமி கோயில் இவரது மூதாதையினரால் நிறுவப்பட்டது என்பதும் பின்னர் இவரே அதன் தர்மகர்த்தாவாக இருந்து வந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சங்க காலத்திலே கூடல்மாநகரிலே தமிழ் அறிஞர்கள் ஒன்றுகூடித் தமிழை ஆராய்ந்தது போல, இந்தக் கந்தவாச மண்டபத்திலே செங்குந்தகுலப் பெரியார்கள் ஒன்றுகூடி சைவச் சிறார்களுக்கு சைவச் சூழலிலே ஆங்கிலக் கல்வி புகட்டுவதற்கான வழிவகைகளை ஆராய்வது வழக்கமாக இருந்தது.

அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாடசாலை இன்று ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி கல்லூரியாக வளர்ந்து நிற்பதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்த இளையதம்பி சாத்திரியாரையும் இந்துபோட் இராஜரத்தினம் அவர்களையும் மற்றைய பெரியோர்களையும் இத்தினத்தில் நாம் நினைவுகூருவோமாக.

(சிறப்புமலர் கட்டுரையில் இருந்து ஒரு பகுதி)

**மலர் அமைப்பு:**
**பழைய மாணவன்**

## பாடசாலையும் ஒரு தெய்வமே

1934 இல் பண்டாரி வளவில் ஒரு சங்க மடத்தில் ஒரு சில பிரமுகர்களினால் ஆரம்பிக்கப்பட்ட செங்குந்தா இன்று அந்த வளவு நிறைய வகுப்பறைகள் கொண்டு ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குக் கல்வியை வாரி வழங்கிக் கற்பகதரு போலப் பூத்துக் குலுங்கிப் பொலிவுடன் விளங்கும் என்று அப்பொழுது யார் தான் நினைத்தார்கள்? அக் காலத்தில் செங்குந்தாவைச் சூழ்ந்துள்ள கிராமம் பிற்போக்கான நிலையில் இருந்தது. கல்வி அறிவின்றி, வேலை வாய்ப்பின்றி பாழ்பட்டு, பரதவித்து நின்ற அக் கிராம மக்களின் பிள்ளைகளுக்கு வாழ்வளிக்கவென்று இப் பாடசாலை அன்று ஒரு வரப்பிரசாதமாக ஆரம்பிக்கப்படாதிருந்தால் அக் கிராமம் இன்றும் கூட அதே நிலையிலேயே இருந்திருக்கும். அப்படியானால் செங்குந்தா கல்வியளித்த நாம் எங்கே? எத்தனையோ பட்டதாரிகளும், டாக்டர்களும், ஆசிரியர்களும், எஞ்சினியர்களும், கணக்காளர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும்? இத்தகைய பல்துறைப்பட்ட அறிஞரையும் அரசியல் வாதி

களையும் விஞ்ஞானிகளையும் ஆரம்பக் கல்வி கொடுத்து வளர்த்தெடுத்தது செங்குந்தாவே இன்று இலங்கையில் மாத்திரமன்றி கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளின்

கல்வி பருகிய எமக்கு அப் பாடசாலை ஒரு தெய்வமன்றோ?

அத்தகைய செங்குந்தா இந்துக் கல்லூரியின் வைரவிழா மலருக்கு ஒரு கட்டுரை வழங்குவதில் நான் பெருமித

**கலாநிதி ச. முத்துலிங்கம**
(பி. எஸ்ஸி, எம். ஏ. பி. எச். டி) முன்னாள் பேராசிரியர்
கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடம்

மூலைமுடுக்குகளிலும் மின்னி ஒளிவீசும் நட்சத்திரங்களாக, நானும் செங்குந்தாவின் ஒரு பழைய மாணவன் / மாணவி என்று பெருமையாக மார்பு தட்டும் பலர் உளர். அன்னை மடியில் பால் போன்று செங்குந்தா அன்னை மடியில்

மடைகின்றேன். ஆசியுரை வழங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுத ஆரம்பித்த போதிலும் ஈற்றில் அது ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையாக அமைந்து விட்டது. இக் கல்லூரி நூற்றாண்டு விழா

(5ஆம் பக்கம் பார்க்க)

### தாயினும் இனியாய்!

உயிர் என உயிருள் உணர்வென எம்மோ(டு)
ஒன்றிய ஒருபெருஞ் சுடரே!
பயனுறக் கல்வி, ஒழுக்கம் பண்பாடு
பயிற்றிய தாயினும் இனியாய்!
உயரிய எழுத்தும் நாடகக் கலையும்
ஓங்கிட உதவிய செல்வீ!
வயிர நல் விழவு கண்டனை வாழ்த்தி
வணங்குவம் வழிவழி ஆண்டு!

கவிஞர் சோ. பத்மநாதன்

## அதிபரின் சிந்தனையிலே...

செங்குந்த இந்துக்கல்லூரி 1994ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதியுடன் ஒரு பஞ்சாங்க ஆண்டைப் பூர்த்தி செய்து வைரவிழாவைக் காண்கின்றது.

இக் கல்லூரி 1948வரை செங்குந்த இந்து இருமொழிப் பாடசாலையாக இருந்து 1949 இல் செங்குந்த இந்து ஆங்கிலப் பாடசாலையாக வளர்ந்தது. 1959இல் க. பொ. த. உயர்தர (கலை) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன அன்றிலிருந்து போதிய மாணவர்கள் தகுதிபெற்ற போதிலும் வேறு எந்த உயர்தர வகுப்புப் பிரிவையும் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் தரமான மாணவர்கள் ஆண்டு 6இல் சேருவது குறைவாகவே உள்ளது.

இக் கல்லூரியின் அதிபர் வரிசையில் அதிபராகக் கடமையாற்றும் முதற் பழைய மாணவன் நான் என்பதைக் கூறிக்கொள்வதில் பூரிப்படைகின்றேன்.

செங்குந்த இந்துக் கல்லூரி எனக்கு என்ன செய்தது என்ற வினாவை எழுப்பாதீர்கள். இக் கல்லூரி உங்களுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்துள்ளது. இனியும் செய்து கொண்டேயிருக்கும் என்பதை மறவாதீர்கள். 'நான் செங்குந்த இந்துக் கல்லூரிக்கு என்ன செய்தேன்?'' என்ற வினாவை எழுப்புங்கள். அதற்கு ஒரு நிறைவான பதிலை நீங்களே பெற்று மானசீகமாக மகிழுங்கள்! கல்லூரியையும் மகிழ்ச்சியடையச் செய்யுங்கள்!

வாழ்க, வளர்க எங்கள் கல்லூரி.

**— மு. பரமேஸ்வரன்**
அதிபர்.

## ப. மா. சங்க தலைவரின் வாழ்த்துரை

செங்குந்த இந்து அன்னை அறுபதாவது அகவையை அடைந்துள்ள இந்த மகிழ்ச்சிகரமான நேரத்திலே இக் கல்லூரி தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து இற்றைவரை அதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரையுமே நினைவுகூர வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

''கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை''

என்னும் பொய்யாமொழிக்கேற்ப நன் மாணாக்கர்களையும் நாடறிந்த அறிஞர் பெருமக்களையும் உருவாக்கித் தந்த எமது கல்லூரி அன்னை எதிர்காலத்திலும் இதே போல பார்புகழும் கல்வி மான்களை உருவாக்கித் தரவேண்டும் என்பதே எனது பேரவா.

**— க. சூரியகுமார்**
தலைவர், ப. மா. ச.

## பணியினை முன்னெடுத்து தொடர்ந்து செல்கிறோம்

ஒரு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் ஆகியன பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கும் முக்கிய அமைப்புக்களாகும். இந்த வகையில், கல்லூரி அன்னையின் வைரவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் முயற்சியில் சங்கம் முனைந்து மகத்தான வெற்றியையும் கண்டுள்ளது என்பதைச் சங்கத்தின் செயலாளன் என்ற முறையிலே தெரிவித்துக்கொள்வதில் இறும்பூதெய்துகிறேன்.

கல்லூரியின் வைரவிழாவைச் சிறப்பாக நடத்த கல்லூரியின் பழைய மாணவர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் முதலியவர்களை நாம் நாடிச் சென்ற நேரத்திலே அவர்கள் அளித்த அன்பு, கனிந்த ஆதரவு எமக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. கடல்கடந்த நாடுகளில் வாழும் எமது கல்லூரியுடன் தொடர்பு கொண்டவர்கள் அளித்த உற்சாகமும் பொருள் உதவியும் எமது உடலிலே புது இரத்தத்தைப் பாய்ச்சியது என்றால் மிகையாகாது.

வருங்காலத்திலும் கல்லூரி வளர்ச்சிக்காக அனைவரது உதவியையும் நாடி நிற்பதோடு. இவ்விழா சிறப்புற அமைய உதவிய அனைவருக்கும் மீண்டுமொருமுறை எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**— எஸ். பத்மராஜா**
செயலாளர் ப. மா. ச,

## பொருளாளர் பேருவகை

கல்லூரிக்குத் தேவையான அத்தியாவசியமான ஆக்கப் பணிகளை பழைய மாணவர் சங்கம் மேற்கொள்வதற்கு நிதி வளம் அவசியம் தேவை. இதனை உணர்ந்து எப்படியாவது பழைய மாணவர்களிடமிருந்தும் கல்லூரியின் நலன் விரும்பிகளிடமிருந்தும் குறைந்த பட்சம் ஒரு இலட்சம் ரூபாவையாவது திரட்டி, அதனை சங்கத்தின் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டு அதிலிருந்து வருடாவருடம் கிடைக்கும் வட்டிப் பணத்தை இத்தகைய செயல்திட்டங்களுக்குச் செலவிட வேண்டுமென தற்போதைய செயற்குழு இவ்வருட ஆரம்பத்தில் தீர்மானித்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. அதன் பயனாக, கல்லூரியின் வைரவிழா கொண்டாடப்படும் இந்த நேரத்தில் ஒரு இலட்சம் ரூபாவை நிரந்தர வைப்பிலிட முடிந்தது என்பதை இத்தருணத்தில் பொருளாளர் என்ற முறையில் பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எமது முயற்சி வெற்றி பெற நிறைந்த மனதுடன் உதவி செய்த அனைவருக்கும் நன்றி.

**கா. ச. சிவானந்தன்**
பொருளாளர்

### அதிபர் வரிசையிலே!

| | |
|---|---|
| ★ அமரர் கு. முத்துக்குமாரசாமிப் பிள்ளை | 1934 — 1943 |
| ★ அமரர் நா. கணபதிப்பிள்ளை | 1944 — 1967 |
| ★ அமரர் S. P. நடராஜா | 1968 — 1969 |
| ★ இலங்கைநாயகம் | 1970 |
| ★ V. K. நாகராஜா | 1971 |
| ★ E. பொன்னம்பலம் | 1972 |
| ★ V. மகாதேவா | 1973 — 1977 |
| ★ அமரர் செ. சிவப்பிரகாசம் | 1978 |
| ★ அமரர் ப. சுவாமிநாதசர்மா | 1979 — 1985 |
| ★ ம. சண்முகலிங்கம் | 1986 |
| ★ வி. அரியநாயகம் | 1987 |
| ★ மு. பரமேஸ்வரன் | 1988 — |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பனசொனிக் [Panasonic Digital - AV - mixer - WJ / AVE - 5] நிக்கோன் FM - 2 ஸ்ரில் கமரா AE - 1 கனோன் ஸ்ரில் கமரா. MX - 10 பன சொனிக் மிக்ஸர். தொடர்பு: நீகல் வீடியோ, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. [8217]

சகல வியாபாரத்திற்கும் தேவைப்படக்கூடிய சோகேஸ் காட்சியறை அலுமாரிகள், 20 அடி நீளம், 8 அடி உயரம் முதிரையிலான அலுமாரி ஆகியன நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. அம்பிகை சென்ரர், இல. 109, பெரிய கடை, யாழ்ப்பாணம் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [34998]

யாழ்ப்பாணம் இல. 54, ஈச்சமோட்டை வீதியில் உள்ள இரண்டு பரப்புக் காணி, சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: S. அல்பிரட், இல. 50, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [35002]

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் இரண்டு பரப்பு வீடும், காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி லலிதாதேவி செம்பாட்டு வேன் (வீரவேங்கை ஜெயராஜ் வீதி), பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகில்) (34919)

### மண்எண்ணெய்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவையினால் 2-2-95, 3-2-95 ஆகிய தினங்களில் காலை 9 — மாலை 5 மணிவரை இறுதி வருட மாணவர்களுக்கு 10 லீற்றரும், ஏனைய மாணவர்களுக்கு 5 லீற்றரும் விலை 22/- வீதம் வழங்கப்படும். மாணவர் அவை. [34963]

### வகுப்புக்கள்

Make up and Hair Dressing ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் 6-2-95 திங்கள் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர், தொடர்புகொள்ளவும். Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். [34980]

### இலகு திருமண சேவை

27 வயது, சித்திரை 3, செவ்வாயற்ற அழகிய ஆங்கில ஆசிரியைக்கு மணமகனும், 31 வயது, திருவோணம், செவ்வாயற்ற கனடா என்ஜினியருக்கு மணமகளும், 31 வயது, ஆயிலியம் 7இல் செவ்வாய் Bio Chemist Norway மணமகனுக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. திருமணம் இலங்கையில். விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. [349?4]

### படவரை கலையியல்

A/L G.A.Q. B.A வகுப்புக்களுக்கான புதிய புள்ளிவிபர வரைப்பட நூல் ஆக்கியோன். கலாநிதி க. குணராசா பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். [34934]

### இலகு திருமண சேவை

33 வயது, மகம், செவ்வாயற்ற பிரான்ஸ் மணமகனுக்கு அழகிய மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். வடமராட்சி கூடிய விருப்பம். து. விமலா, யாழ்/ நாச்சிமார் கோயிலடி. [34997]

### தவறிவிட்டது

ப. பரமேஸ்வரி ஆகிய எனது அறிமுக அட்டை யாழ்ப்பாணத்துக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. அதன் இலக்கம் 497010357 V இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தயாளன் விவசாய மாளிகை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (சி-488)

கல்வியன்காடு, கலட்டிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இருதயம் பதித்த மோதிரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திரு. க. முத்துலிங்கம், சரா வீதி, விளையாட்டரங்க வீதி, கல்வியன்காடு. [சி-483]

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த கஸியர், பில் கிளாக் தேவை. தகுந்த ஆவணங்களுடன் நேரில் வரவும். 180, அருச்சுனா சாலை, [ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம். (35010)

### குருக்கள் தேவை

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலுக்கு நித்திய பூசைகள் செய்ய குருக்கள் தேவை. இருப்பிட வசதிகள் உண்டு. விரும்புவோர் 10-2-95க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். தொடர்பு: நிர்வாக சபை, மூத்த நயினார் கோயில், ஆனைக்கோட்டை. [35000]

### யாருடையது?

28-01-95 பகல் 2மணியளவில் எங்கள் வீட்டு வாசலில் ஒரு மோதிரம் கண்டெடுத்துள்ளோம். தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். காலை 6-30க்கும் — 8-30க்கும் இடையிலும் மாலை 6-00க்கும் — 7-00க்கும் இடையிலும் மட்டுமே தொடர்பு கொள்ளலாம். திரு. திருமதி க. முத்துலிங்கம், சரா வீதி, விளையாட்டரங்க வீதி, கல்வியன்காடு. [சி-484]

## முக்கிய அறிவித்தல்

**தெல்லைப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுக்களால் அங்கீகரிக்கப்படாத புதிய அங்கத்துவ விண்ணப்பங்களை பரிசீலனை செய்தல்**

| கிளை இலக்கம்: | கிளையின் பெயர் |
|---|---|
| 01 | தெல்லிப்பழை |
| 14 | கொல்லங்கலட்டி |
| 26 | மயிலிட்டி வடக்கு |
| 29 | வீமன்காமம் |

மேற்படி கிளைகளில் 10-12-1991இன் பின்னர் அங்கத்துவம் பெறுவதற்கு 31-03-94வரை விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பப் படிவங்களும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பரிசீலனை செய்யப்படும்.

| காலம் | நேரம் மு. ப. | | பி. ப. |
|---|---|---|---|
| 10-02-95 வெள்ளி | 9-00 | — | 3-00வரை |
| 11-02-95 சனி | 9-00 | — | 3-00வரை |

எனவே தங்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கு உதவியாக குடும்பப் பதிவு அட்டையுடன் விண்ணப்பதாரர் தங்களை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தேசிய அடையாள அட்டை அல்லது ஏனைய அறிமுக அட்டையுடன் மேலே குறிப்பிட்ட திகதிகளில் தவறாது நேரில் சமுகமளித்து பூரண ஒத்துழைப்பு வழங்கி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வறிவித்தல் பிரதி ஒன்று தங்களின் அங்கத்துவ விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:

மேற்படி அறிவித்தல் தமிழீழ நிர்வாக சேவையின் பணிப்புரைக்கமைவாக பிரசுரிக்கப்படுகின்றது

ஐ. சிங்காரசா,
செயலாளர்,
1995-01 28 தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கம்.
[சி/480]

உ
தேவி துணை
திருநெல்வேலி

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
## புதிய சித்திரத் தேருக்கான
# பவளக்கால் ஏற்றும் விழா

அடியார்களே!

ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் சித்திரத் தேருக்கான "பவளக்கால் ஏற்றும் வைபவம்" இன்று (03 - 02 - 1995) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் சுபமுகூர்த்த வேளையில் மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு அம்பாள் அருள் பாலித்துள்ளார். எனவே அடியார்கள் அனைவரும் மேற்படி முகூர்த்த வேளையின் போது வருகை தந்து இந்த வைபவத்தை சிறப்பித்து அம்பாளின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

★ ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி ஜீவரட்ணம் ஆச்சாரியார் அவர்களின் கைவண்ணத்தில உருவாகி வருகின்ற இப் பிரம்மாண்டமான அழகிய சித்திரத் தேரிலே இவ்வருட மஹோற்சவத்தின் போது அம்பாள் தேரேறி வீதியுலா வரவேண்டும் என்ற பேரவா கொண்ட அடியார்கள் அனைவரிடமும் – தேர் திருப்பணி வேலைகள் துரித கதியாக மேற்கொள்ள – பேருதவிகள் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தேவஸ்தானம்.

[34994]

## மானிப்பாய் மருதடியானின் மகிமை
### தமிழீழ மக்கள் பிரதிநிதிகள் மூலம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் 07-09-94 அன்று இரவு சில தீய சக்திகளினால், மருதடியானின் ஆபரணங்களும், பணமும் சூறையாடப்பட்டது அடியவர்கள் தெரிந்ததே.

இன்றைய போராட்ட காலத்தில் தமிழ் மக்களின் ஏகோபித்த பாதுகாவலர்களாகவும் இடுக்கண் களைபவர்களாகவும் எமது தமிழீழ காவல்துறையினர் செயற்பட்டு வருகின்றார்கள்.

இக்கூற்றுக்கு ஒரு சான்றாக எமது ஆலயத்தில் நடந்த அசம்பாவிதத்தை தமக்கு நடந்த இடர் எனக் கருதி மிகக்குறுகிய காலத்தில் இதில் சம்பந்தப்பட்ட விஷமிகளை கண்டுபிடித்ததும் அல்லாமல் களவுபோன பொருள்களில் பெரும்பகுதியை மீட்டு எமக்கு கையளித்துமுள்ளார்கள்.

மக்களின் சேவையே இறைசேவையாக கருதி செயற்பட்டு வரும் தமிழீழ காவல்துறையினருக்கு குறிப்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு எமது பாராட்டுதல்களையும், நன்றிகளையும் மானிப்பாய் மருதடியான் அடியார்கள் சார்பில் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் மருதடியானின் அருட்கடாட்சம் கிடைக்க பிரார்த்திப்போமாக.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தா சபையினரும்,
வழிபடுவோர் சங்கமும்.
(34999)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 06 – (5 – 1950 | 15 – 02 – 1994 |

அமரர்
### கந்தையா வைத்திலிங்கம்
[சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்]
திதி: 03 - 02 - 1995

எங்களின் வாழ்வுக் காய் நீர்
எண்ணரும் பணி புரிந்திர்
திங்களாய் எங்கள் வீட்டில்
தினந்தினம் ஒளிர்ந்து நின்றீர்
உங்களின் நினைவு என்றும்
உள்ளத்தில் நிறைந்து வாழும்
பங்கமில்லாமல் வாழ்ந்தீர்
பரமனின் அடியில் சேர்வீர்!

தங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.

நீதிமன்ற வீதி,
மல்வாகம். [7887]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### இராசமணி கணபதிப்பிள்ளை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05-06-1905 | 15-01-1994 |

திதி: 03 - 02 - 1995

அன்பால், அறிவால், பண்பால் எங்களை எல்லாம் வழிநடத்தி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு இறைவன் பாதம் தொழுதிடச்சென்று ஓராண்டு சென்றாலும் எங்கள் சோகம் மாறாதம்மா.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அல்வனை வீதி, சண்டிலிப்பாய். (34985)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**94 பரீட்சையில் தோற்றியவர்களுக்கான**
## 95 மீட்டல் DAY CLASS

பொருளியல்:-
திரு. இராஜேஸ்வரன் 8.30 — 9.30
கணக்கியல்:-
திரு. கலைச்செல்வன் 12.30 — 2.00
அளவையியல்:-
திரு. A. பிரபா 11.00 — 12.00
வர்த்தகம்:-
திரு. சிவப்பிரகாசம் 9.30 — 11.00

✶ வாரத்தில் 4 நாட்களும் நடைபெறும்
[சி/465]

## தட்டச்சாளர் தேவை

சாவகச்சேரி நகருக்கு அண்மையில் உள்ள நிறுவனமொன்றில் பணியாற்றக்கூடிய தட்டச்சாளர் தேவை.

★ தகைமை: க. பொ. த. சா/த அல்லது தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
★ வயது: 20 — 50 வருடங்கள்.
★ சம்பளம்; ரூபா 2,500/-க்கு மேல் தகுதிக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

18-02-95இற்கு முன் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

தொடர்புகளுக்கான முகவரி:
கரன் நிறுவனம்,
தலைமைக் காரியாலயம்,
டச்சு வீதி,
சாவகச்சேரி.
(34981)

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம்
## அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்
## நிகழ்ச்சிகள்

**03 – 02 – 1995 வெள்ளிக்கிழமை**
**மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்**


மாலை 5-30 மணி:
அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள் )– பாட்டு, வீணை

6-15 மணி:
செல்வி சாரதா சச்சிதானந்தம் — பாட்டு
திரு. சு. கோபிதாஸ் — வயலின்
திரு. மா. சிதம்பரநாதன் — மிருதங்கம்

7-15 — 8-30 மணி:
திரு. V. K. நடராசா — பாட்டு
ப்ரம்மஸ்ரீ S. வெங்கடேஸ்வர சர்மா— வயலின்
ப்ரம்மஸ்ரீ S. பாலச்சந்திரசர்மா — மிருதங்கம்

(34956)

## 31-ம் நாள் நினைவலைகள்



| அன்னை மடியில்: | ஆண்டவன் சந்நிதியில்; |
|---|---|
| 31 – 07 – 1927 | 04 – 01 – 1995 |

### அமரர் இராசையா பொன்னம்பலம்
[ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் – உடுவில் உதவி அரச அதிபர் செயலகம்; கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவர்]

பெற்றவர்களின் பிள்ளை — சிறு
பிள்ளைகளின் தந்தை
கற்றறிந்தவர்களின் நண்பன்
கற்றிடாதவர்களின் ஆசான்
இல்லத்தின் நல்ல தலைவன்
தம்பிக்கென சிறந்ததொரு தமையன்
தக்க வழியில் நெறிப்படுத்தும் தோழன்
நிர்வகித்தலில் கட்டுப்பாடு
இத்தனையும் பெற்றமையாலன்றோ
முருகன் தன் சந்நிதியில் வைத்தே - பொன்
மூச்சை அபகரித்தான்.

என் செய்வது? எவரிடம் கேட்பது? இத்தனைக்கும் உங்கள் மறு பிறப்பிற்காய் நிதம் வாடும் ...

— குடும்பத்தினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (35001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அமைச்சரின் உறுதி மொழி

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்படமாட்டா என்றும், அவை தொடர்ந்து நடைபெறும் என்றும் அரசாங்கத் தரப்பில் மீண்டும் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இரு சாராருக்கும் இடையேயான மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெற்று இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும், அடுத்த சந்திப்பு நடக்குமா என்ற சந்தேகநிலை உருவாகி இருக்கிறது. பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்பதற்கான அறிகுறி எதுவுமே தென்படாத நிலையில், அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா இத்தோடு இரண்டாவது தடவையாக பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும் என்று உறுதி அளித்திருக்கிறார். ஆனால் அதனைப் பற்றிய விவரம் எதனையும் வெளியிடவில்லை.

சமாதானப் பேச்சுத் தொடரவேண்டும்; இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்; அமைதியுடன் வாழ வேண்டும் என்பதுதான் தமிழ் மக்கள் தரப்பிலும் சரி, சிங்கள மக்கள் தரப்பிலும் சரி அனேகமானோரின் விருப்பம்.

ஆனால் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய அரசாங்கம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரெஞ்சு நாளிதழுக்கு வழங்கிய செவ்வியின் போது, அடுத்த தரப்பினரான விடுதலைப் புலிகளை மிரட்டும் தொனியில் கருத்துத் தெரிவித்த பின்னர், அரசாங்கம் தான் ஆரம்பித்த சமாதான முயற்சியை வெற்றிகரமாக, சாதுரியமாக முன்னெடுத்துச் செல்லுமா என்பது கேள்விக்குரியதாகவே நிற்கிறது.

போர் வேண்டாம்; சமாதானப் பேச்சு மூலமே தீர்வு என்று மக்கள் ஆணை பெற்றுப் பதவிக்கு வந்த அரசாங்கம் போரைப் பற்றிச் சிந்திப்பது — அடி மனதில் அதனைப் பதித்திருப்பது — ஆரோக்கியமான சூழலைத் தோற்றுவிக்காது. இது ஆட்சிக்கு வருவதற்கு உதவிக்கரம் கொடுத்த மக்களை தள்ளி வீழ்த்துவதற்கு ஒப்பானதாகும். சந்திரிகா மீதும், அவரது அரசு மீதும் மக்கள் கொண்ட நம்பிக்கைக்கு விசுவாசமாகச் செயற்படுவதானால் போர் நடத்துவது பற்றி அரசு மறந்துவிட வேண்டும்.

மேலும், பேச்சுக்களை மீளத் தொடங்குவதில் உள்ள தடங்கலுக்கான உண்மையான காரணத்தை அல்லது விவரங்களை வெளியிடாமல் மறைப்பது சந்தேகத்துக்கு இடம் கொடுக்கிறது.

விடுதலைப் புலிகள் பெற்றோல், டீசல் போன்ற பொருள்களை பெருமளவில் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துகிறார்கள். காவலரண்களை பலப்படுத்துகிறார்கள். புதிய முகாம்களை அமைக்கிறார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்களே தகவல்களை கொடுத்து பத்திரிகைகள் மூலம் செய்திகளைப் பிரசுரித்து விஷமப் பிரசாரத்தில் ஈடுபடுகின்றன.

இத்தகைய போக்கு சமாதானப் பேச்சை முன்னெடுப்பதற்கு உதவாது; பதிலாக நிலைமையை மோசமாக்கவே துணைபுரியும். 'திருகுதாள' போக்கைக் கைக்கொண்டு சமாதான முயற்சிகளில் வெற்றி அடையமுடியும் என்று நினைக்கலாகாது.

இப்போது தொடங்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் வெற்றி அளிக்க வேண்டுமாயின் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பாரும் பரஸ்பரம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஒரு தரப்பார் மீது அடுத்தவர் குற்றஞ்சாட்டிப் பிரசாரம் செய்வதனை நிறுத்த வேண்டும்.

இத்தகைய சிநேகபூர்வமான சூழ்நிலையை வளர்த்துக் கொள்ளாவிடில், சாதகமான விளைவை எதிர்பார்க்க முடியாது. அரிய சந்தர்ப்பம் ஒன்றை கைநழுவ விடுவதாகவே முடியும்!

# சமாதானம் மிகத்தொலைவில் தான்; எனினும் நடந்து பார்ப்போம்

### சந்திரிகா கூறியதாக ஹிஸ்புல்லா தகவல்

கொழும்பு, பெப். 3

''சமாதானம் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் தெரிகிறது; இருந்தாலும் நடந்து பார்ப்போம்''

—இவ்வாறு தன்னிடம் ஜனாதிபதி தெரிவித்ததாக பிரதித்தொலைத் தொடர்பு அமைச்சர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அண்மையில் காத்தான்குடி அல்ஹம்ரா வித்தியாலயத்திற்கான கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து அவர் உரையாற்றினார். அப்பொழுதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு வடக்கு — கிழக்கில் ஓடும் இரத்த ஆறு நிறுத்தப்பட வேண்டும் அமைதியான சூழ்நிலை உருவாகினால் தான் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியும் என்றும் ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். [ஐ-5]

# வடக்கே மின்சாரம் வழங்குவதற்கு அரசுக்கு 3மார்க்கங்கள் உள்ளன

### ஆனால் ஜெனரேற்றர்கள் பொருத்துவதே சுலபமானது

வடமாகாணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு மூன்று மார்க்கங்களை அரசாங்கம் இனங்கண்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகள் தவிர்ந்த வடமாகாணத்தில் மின்சார விநியோகம் தற்போது நடைபெறுவதில்லை.

சுன்னாகம் மின் நிலையத்துக்கும், மின் விநியோக நிலையங்களுக்கும் மற்றும் மின்கம்பிகளுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் மின்சாரத் திட்டத்தின் பெரும் பகுதி புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

டீசல் ஜெனரேற்றர்கள் மூலம் மின்சாரத்தை வழங்குவது —

நீர்மின்விநியோகம் —

சுன்னாகத்தில் மின் நிலையத்தில் மிகச் சக்தி வாய்ந்த ஜெனரேற்றர்களை அமைப்பது — ஆகியனவே அரசின் உத்தேச திட்டமாகும்.

நீர்மின் விநியோகம், சுன்னாகம் மின்நிலையத்தில் சக்தி வாய்ந்த ஜெனரேற்றர்களை அமைப்பது ஆகிய இரண்டுக்கும் நீண்ட காலம் பிடிக்கும்.

ஆனால் டீசல் ஜெனரேற்றர்கள் பொருத்துவது சுலபமானது என்று அரசாங்கம் கருதுகிறது.

அதேசமயம் — கிளிநொச்சி, முல்லைத்தீவ, வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு நீர்மின்திட்டத்தை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அரசு கருதுகிறது.

— இவ்வாறு இலங்கை வானொலியில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

# கடமை நேரத்தில் டாக்டர் ஒருவரை தாக்குவதற்கு முயன்ற ஆண்தாதி

## தொழிற்சங்க நடவடிக்கை: வைத்தியர் சங்கம் மிரட்டல்

கொழும்பு, பெப்.3

தனது கர்ப்பிணி மனைவிக்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்காததால் தனது சிசு இறந்ததாகக் கூறி ஆண் தாதி ஒருவர் குழு ஒன்றுடன் சேர்ந்து டாக்டரைத் தாக்க முனைந்தார்.

இச் சம்பவம் காலி மாவட்டம் மகாமோதர ஆஸ்பத்திரியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் சரியான விசாரணை செய்யாத பட்சத்தில் தாம் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்ற அரச வைத்தியர் சங்கத் தலைவர் ஆனந்த சமரசேகரா அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-3-5)

### 70 லட்சம் ரூபா செலவில்

## டி.பியின் மகள் கண்டியில் கட்டிய ஆடம்பர மாளிகை

கொழும்பு, பெப். 2

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் மகள் கண்டியில் கட்டிய ஆடம்பர மாளிகை ஒன்று குறித்து ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்களே சந்தேகம் கொண்டுள்ளன.

டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக பதவி வகித்த போது— 1994 ஜூலையில் — அரண்மனை போன்ற இந்த மாளிகை கட்டத் தொடங்கப்பட்டதாக — இப்போது தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த மாளிகையின் தரைப் பரப்பு 9,000 சதுர அடி என்றும்—

பல லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுக் கட்டப்பட்ட மாளிகை அரைகுறையாக உள்ளதாகவும்— கூறப்படுகிறது.

முற்றாக கட்டி முடிக்கப்படாத இந்த மாளிகையின் இப்போதைய பெறுமதி 70லட்சம் ரூபா என்று மதிப்பிடப்படுகிறது.

இவ்வளவு பெருந்தொகைப் பணத்தில் வீடு கட்டுவதற்கு விஜேதுங்காவின் மகள் வருமானவரி கட்டுவரா? இவருக்கு எங்கிருந்து பணம் வந்தது? — போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இது சம்பந்தமான முறைப்பாடுகள் ஜனாதிபதிஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டால்—

முன்னாள் ஜனாதிபதியே முதலில் ஊழல் சம்பந்தமாக விசாரணையை எதிர்நோக்க நேரிடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. [அ]

## முத்தி தரும் நாம வழிபாடு

**ஞானக்கதிர்**

தமிழில் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதில் வல்லவர் இருவர். ஒருவர் திருவள்ளுவர், மற்றவர் ஒளவையார்.

புலவர்கள் பலர் கூடியிருந்த சபையில் ஒளவையாரைப் பார்த்து ''விதியை வெல்ல முடியுமா?'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு ஒளவையார் ''ஆம்'' என்று பதிலளித்தார்.

எப்படி வெல்ல முடியும் என்று மற்றொருவர் கேட்டார்.

அதற்கு ஒளவையார் —

சிவாயநமவென்று தியானித்துக் கொண்டிருப்பவர்க்கு ஒருநாளும் அபாயம் இல்லை. விதியை வெல்வதற்கு சிவாயநமவென்று தியானித்தலே உபாயம் ஆகும் — என்றார்.

ஒளவையார் கூறிய பாடல் இது:

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

நாம வழிபாட்டினால் விதியை வெல்ல முடியும் என்றார் ஒளவையார். திருஞானசம்பந்தர் நாம வழிபாட்டினால் முத்தியடைதல் இயலும் என்கிறார்.

பக்தி மிகுந்தவராய் மனம் உருகிக் கண்ணீர் பெருகச் சொல்லுமவர்களை நல்ல முத்தி நெறியிலே செலுத்துவதும் நான்கு வேதங்களிலும் சொல்லப்படும் உண்மைப் பொருளானதும் எம்பெருமானது திருநாமமாகிய நமச்சிவாய என்பதே என்கிறார் சம்பந்தர். இப் பொருளைக் கொண்ட தேவாரம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்(கு) உய்ப்பது
வேத நான்கினு (ம்) மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

பக்தியை வளர்க்கும் சாதனங்களுள் எல்லாம் மிகச் சிறந்தது இறைவனது நாமத்தைச் சொல்லுதலும் திருமந்திரத்தை ஓதுதலுமாகும். இது எல்லோராலும் பற்றற்குரியதாகும்.

பேரன்போடு இறைவனை நினைத்துக் கொண்டு

**செல்வி பா. பாரதி**

நாமத்தை ஓதுதல் பெரும் பயன் தரும். இறைவனது நாமத்தை ஓதும் மனம், வர வரத் தூய்மை அடையும்.

மனக் கவலையை மாற்றவும் விதியை வெல்லவும் வீடு பேறு எய்தவும் இறைவனின் நாமம் துணை புரியும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 3

பாடசாலை அணிகளுக்கிடையில் இவ்வாரம் நடைபெறும் கிரிக்கெட் ஆட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

★ மானிப்பாய் இந்து எதிர் யாழ். இந்துக் கல்லூரி — மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம் இன்று பி. ப. 2 மணி முதல் நாளை காலை 8.30 மணி முதல்.

★ கனகரத்தினம் ம. ம. வி. எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரி — கனகரத்தினம் ம. ம. வி. மைதானம் இன்று பி. ப. 2 மணி முதல் நாளை காலை 8.30 மணி முதல்.

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி — சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் நாளை காலை 8.30 மணி முதல்,

★ யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி — கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம் நாளை மறுதினம் காலை 8.30 மணி முதல். (இ-4-20)

## சுவிஸில் தமிழர் நல அமைப்பு

கொழும்பு, பெப்.3

சுவிஸில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட தமிழர்களைப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்று ஒட்சோர்ன் நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட அந்த அமைப்பு அகதிகளுக்கான பாதுகாப்பமையம் ஒன்றை ஸ்தாபிக்க உள்ளது. (ஐ)

## தொழிலாளர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், பெப். 3

தொழில், கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை தமிழீழ நிர்வாக சேவையின் மானிட மூலவள அபிவிருத்தி பிரிவு மேற்கொண்டுள்ளது.

அதற்கு வசதியாக மேற்படி நிறுவனங்களில் தொழில் புரிவோரின் விவரங்களை தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகத்தில் உள்ள மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவில் அதற்குரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-க]

## பம்பலப்பிட்டி தொடர்மாடியில் கொலை

கொழும்பு, பெப். 2

பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வசித்து வந்த பெண் ஒருவர் கொலையுண்டார்.

தொடர்மாடியில் ஒரு தனி வீட்டில் இந்தப் பெண் தங்கியிருந்தார் என்றும்—

இவர் கொலை செய்யப்பட்டதுக்கான காரணம் தெரியவில்லை என்றும்— பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## செப்ரிசீமியா: இருவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 3

செப்ரிசீமியா நோயின் தாக்கத்துக்கு ஆளாகி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் இருவர் உயிரிழந்தனர்.

கொடிகாமம் கச்சாயை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சபேஷ்கஜன் [வயது 9 மாதம்], சுன்னாகத்தைச் சேர்ந்த தர்மராசா மங்களேஸ்வரி [வயது 34] ஆகிய இருவருமே மரணமானவர்கள் ஆவர். [ஒ-15]

## மா விநியோகம்

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கம் அதன் கிளைகளினூடாக பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ மாவை பாவனையாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

### பல்கலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானத் துறைக்கும்—

350 மாணவர்கள் விவசாயத் துறைக்கும்—

3 ஆயிரத்து 164 மாணவர்கள் கலைத் துறைக்கும்—

205 மாணவர்கள் சட்டத் துறைக்கும்—

643 மாணவர்கள் முகாமைத்துவத் துறைக்கும்—

882 மாணவர்கள் வர்த்தகத் துறைக்கும் —

ஆயிரத்து 180 மாணவர்கள் பௌதிக விஞ்ஞானத் துறைக்கும் — அனுமதி பெற்றுள்ளனர்.

இக்கல்வி ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்குரிய அடிப்படைத் தகைமையை 48 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பெற்றிருந்தனர் என்று பிரதி உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்ப வர்ணபால தெரிவித்துள்ளார்.

பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கருத்துத் தெரிவிக்கையில், ஜி. சி. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் மாணவர்கள் பெற்ற உயர்தர புள்ளிகளின் அடிப்படையிலேயே வெட்டுப் புள்ளிகளும் உயர்த்தப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (இ-7)

### பாடசாலை.....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமன்றி மேலும், பல ஆண்டுகள் வளர்ச்சி பெற்று எமது வருங்காலச் சந்ததியினரையும் வளர்த்தெடுக்க வேண்டுமென ஆசிகூறி, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

(வைரவிழா மலரிலிருந்து ஒரு பகுதி)

### சமாதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் நிர்ணயிக்கவில்லை அதற்கு அர்த்தம் பேசுக்களில் தளம்பலோ அல்லது குழப்பமோ என்பது அல்ல.

வடபகுதி மக்கள் எமது அரசாங்கம் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவர்கள் இன்றைய இனப் பிரச்சினைக்கு ஒரு கௌரவமான நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

நிச்சயம் வடக்கு, கிழக்கு பக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் நாம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்போம் என்றும் அமைச்சர் தர்மசிறி குறிப்பிட்டுள்ளார்' (ஒ)

### களவாக..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றனர்.

தாம் இரத்தத்தை விற்பதாக நினைத்துக் கொண்டு ஏழைக் கிராமத்து மக்களில் சிலர் தம்முடைய சிறுநீரகங்களில் ஒன்றை இழந்திருக்கிறார்கள் என்று பெங்களூர் நகர காவல்துறைத் துணைத் தலைவர் கூறுகிறார்.

500 முதல் 600 பேர்வரை இவ்வாறு சிறுநீரகங்களை இழந்துள்ளது' தெரியவந்துள்ளது. இருப்பினும் அவர்கள் அனைவரும் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்று கூறமுடியாது

இத்தகைய சிறுநீரகங்களை பெற்றவர்களில் சிலர் சவூதி அரேபியர் என்பதனால் விசாரணைக் குழு ஒன்றை சவூதி அரேபியாவுக்கு அனுப்ப இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-4)

**மனம் ஆயிரம் சொல்லுமே**
**மரம் ஆயிரம் கண்டால்**

### உள்ளூராட்சித் தேர்தல்கள்:

# இ. தொ. கா. தனித்து போட்டியிட முடிவு

கொழும்பு, பெப். 3

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இ.தொ.கா. தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற தீர்மானத்தை ஊவா மாநில அரசியல் பிரிவு கூடி ஏகமனதாக முடிவு எடுத்துள்ளது.

இ. தொ. காவின் மாநில அரசியல்பிரிவு பொறுப்பாளர் திரு. எம். எஸ். முத்தையா தலைமையில் நடைபெற்றஇந்தக் கூட்டத்தில் ஊவா மாகாணசபை, பிரதேச சபைகள் மாநகர சபை, நகரசபைகளில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா. சார்பானஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### காணாமற்போனோர் தொடர்பாக

## வடக்கு கிழக்கில் இருந்து ஐந்நூறு முறைப்பாடுகள்

88 ஆம் ஆண்டில் இருந்து காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வடக்கு - கிழக்கில் இருந்து இதுவரை 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் வட- கிழக்கில் 6 ஆயிரம் பேருக்கு மேல் காணாமற்போயுள்ளனர் என்று முன்னர் மதிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. [ஐ-3]

## அரச வைத்தியர்களுக்கு புதிதாக கட்டுப்பாடுகள்

### விரைவில் கொண்டுவரப்படலாம்

கொழும்பு, பெப். 3

அரசதுறையில் உள்ள வைத்திய ஆலோசகர்கள், தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்வதில் சில கட்டுப்பாடுகளை அரசு கொண்டுவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வைத்திய ஆலோசகர் ஒருவர் தனிப்பட்ட வைத்தியம் செய்வதற்கு முன்னர் குறைந்தது 6 மணித்தியாலங்களாவது அரசாங்க ஆஸ்பத்திரியில் கடமையாற்ற வேண்டும் என்பதும் இவற்றுள் ஒன்று என்று தெரிவிக்கப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் டாக்டர்கள் அறவிடும் கட்டணம் சம்பந்தமாகவும் அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்க உள்ளது.

இது தொடர்பான பேச்சுக்கள் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் நடத்தப்பட இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

டாக்டர் ஒருவரின் சிபார்சுக் கடிதத்துடன் வரும் நோயாளிகளை மட்டுமே வைத்திய ஆலோசகர்கள் பார்வையிட முடியும் என்ற புதிய கட்டுப்பாடும் வைத்திய ஆலோசகர்களுக்கு விதிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# மேற்கு ஐரோப்பாவில் தொடர்ந்தும் கடும் மழை!

### நெதர்லாந்தில் மக்கள் பாதிப்பு

பொன், பெப். 3

மேற்கு ஐரோப்பா பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழை மற்றும் பனிப்புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி மீட்பு பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நெதர்லாந்தில் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். அங்குள்ள வால் ஆற்றில் நீர்மட்டம் அபாயகரமான அளவுக்கு அதிகரித்து வருகிறது.

அவசர நடவடிக்கைகளில் நெதர்லாந்து இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிக்கு உதவுவதற்காக பிரிட்டன் அரசு நெதர்லாந்துக்கு ஹெலிக்கொப்டர்களை அனுப்பிவைத்துள்ளது.

மேற்கு ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளான ஜேர்மன், பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வெள்ள நிலைமை சற்றுத் தணிந்துள்ளது.

இந்த நாடுகளில் காலநிலை சீரடைந்திருப்பினும் இயல்பு நிலை ஏற்பட இன்னும் ஓரிரு வாரங்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## உலக மகாயுத்த குண்டு மீட்பு

பேர்லின், பெப். 3

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட 250 கிலோ எடையுள்ள வெடிகுண்டு ஒன்று ஜேர்மனியில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் குண்டு விமானத்தில் இருந்து போடப்பட்ட போது வெடிக்காத நிலையில் நிலத்தில் புதையுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேர்லினுக்கு வடக்கேயுள்ள ஒரேனியன்பார்க் நகரின் திடலில் மறைந்திருந்த இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.

இந்தக் குண்டைச் செயலிழக்கச் செய்வதற்காக இப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் வேறு இடத்துக்கு அப்புறப் படுத்தப் பட்டுள்ளார்கள். (ஒ)

### நோயாளர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டிருந்த ''பிளாம்பயான்'' கப்பலின் குத்தகைக்காலம் முடிவடைந்ததையடுத்து புதிய கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பெறவிருக்கிறது. (இ-3)

## பாடவிதானத்தில் அழகியற் கல்வி

கொழும்பு, பெப்.

சகல பாடசாலைகளிலும் அழகியற் கல்வியை பாடவிதானத்தில் அறிமுகம்செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாரம்பரிய சங்கீதக் கருவிகளை பாடசாலை நிகழ்ச்சிகள், மற்றும் கிராம வைபவங்களில் பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-4)

## சிற்றூழியரை நிரந்தரமாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 3

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கடமை புரியும் சிற்றூழியர்கள் 16 வருடங்கள் சேவை செய்தும் அவர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பலன் எதுவும் காணவில்லை என்று கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

சிற்றூழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளார். [க-17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டிய அரங்கேற்றம்

பாரதி கலா மன்றம் திருநெல்வேலி
இயக்குநர்
**திருமதி ஞானமணி செல்லையா**
அவர்களின் மாணவியும்
யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்
கணபதிப்பிள்ளையின் மகளுமான
**செல்வி தமிழ்ச்செல்வி**
அவர்களின்
**பரத நாட்டிய அரங்கேற்றம்**

இன்று நல்லூர் இளம் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் 5 மணியளவில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம். இவ்விழாவில் அனைவரும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பெற்றோர்கள்.

(35014)

# வாழ்த்துகிறோம்

இன்று (3-2-95) மாலை 5.00 மணிக்கு இளங் கலைஞர் மன்றத்தில் நடைபெற இருக்கும்

செல்வி
**தமிழ்ச்செல்வி கணபதிப்பிள்ளை**

அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் இனிது நிறைவேறி செல்வியின் கலை மேலும் வளர சக மாணவிகளாகிய நாங்கள் வாழ்த்துகிறோம்.

உயர்தர வகுப்பு மாணவிகள்
(யாழ் இந்து மகளிர் கல்லூரி)

(35011)

வலி - வடக்கு
ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம்
# வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: **05 – 02 – 1995** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி

இடம்: யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (நீதி மன்ற வீதி)

சம்மேளனப் பிரதிநிதி ஒய்வூதியர்களின் வேதனம் கால நிலைக்கேற்றபடி உயர்த்தல் பற்றியும், அரசாங்கத்திற்கு உணர்த்தவிருக்கும் விடயங்கள் பற்றியும் ஏனைய விருந்தினர்கள் ஒய்வூதியர்களின் நலன் கருதி செய்யவிருக்கும் நலன்கள் பற்றியும் தெரிவிப்பார்கள்.

இம்மாவட்டத்தில் நடைபெற்ற போர்க் காலத்தில் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்கள் தமது விவரங்களை செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும். சம்மேளனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு விவரங்கள் தேவைப்படுகின்றன.


இடம் பெயர்ந்த அங்கத்தவர்களின் முகவரிகள் தெரியாதவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படவில்லையாதலால், இந்த அறிவித்தலை ஏற்று கூட்டத்திற்குச் சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வ. செ. துரைரத்தினம்,
செயலாளர்.

"கலாபதி"
நீதி மன்ற வீதி,
மல்லாகம்.

[7885]

# ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு: 15 – 06 – 1917
இறப்பு: 16 – 01 – 1994

**அமரர் நீலயினார் முத்தையா**
[புங்குடுதீவு கிழக்கு – 12 ஆம் வட்டாரம்]

திதி: 03 - 02-1995

அன்னையாய், தந்தையாய், குருவாய், தெய்வமாய், எங்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி நடத்தி வாழ்வளித்து என்றும் எம்மோடு தோன்றாத் துணையாய் நிறைந்து. எம் நீங்காத நினைவில் நின்று வாழும் எம் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைவிட்டு, உலகின் கண்களிலிருந்து மறைந்து ஆண்டு ஒன்று சென்று விட்டாலும், பூரண வாழ்வு வாழ்ந்து பரமபதம் அடைந்த தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தங்கள் – மனைவி, மக்கள்,
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
மு. சிவலோகநாதன்
(மகன்)
தபால் பெட்டி ஒழுங்கை,
32, தாளையடிலேன்,
திருநெல்வேலி.

(34976

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஆண்டு ஒன்று ஆகியதோ உன் பூமுகம் கண்டு

மண்ணில்:
08 - 07 - 1974

மகாங்களில்:
03 - 02 - 1994



**செல்வி ஜெனிபர் விஜயரட்ணம்**
(செல்வி)

கண்மணியே நீ இங்கின்றி
என் கண்களில் சமுத்திரமே.
உன் பூமுகம் காணாது
என் கண்களில் உறக்கமில்லை.
உன் கனிமொழி கேளாது
என் உலகினில் சப்தமில்லை.
உன்னுடன் உறங்கும் காலம்வரை
நான் காத்திருப்பேன் உன் நினைவுகளுடன்.
எம் காலம்வரை மறக்கமுடியா உன்

அன்பு அம்மா, அப்பா,
சகோதரங்கள், குடும்பத்தினர்.

16/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[35013]

# 1ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 12 – 02 – 1929
உதிர்வு: 15 – 01 – 1994

திருமதி
**தனலட்சுமி இரத்தினகோபால்**
திதி: 03 – 02 – 1995

தாயாய் அன்போடெமை சலியாது வளர்த்து
சேயாய் மானமொடுநாம் தரணியில் வாழநீர்
வாயால் எமக்குரைத்த வார்த்தைகளை நினைந்து
ஓயாதாண் டொன்றாகியும் உருகுதே எம்மிதயம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

லக்சுமி வாசம்,
யாழ்ப்பாணம்.

[சி/494]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசோதி நடராசா

குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமதி சிவசோதி நடராசா 2.2.95 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் மகாலிங்கம் (பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்), தேவநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, சபாநாயகம் ஆகியோரின் மாமியாரும், அழகேந்திரம், குமாரசாமி, வேலுப்பிள்ளை, சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2.2.95 வியாழக்கிழமை 3.30 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
ந. மகாலிங்கம்
[மகன்]

அச்சுக்கூட வீதி,
கொக்குவில்

[35016]

## பிரான்சிஸ்பிள்ளை செல்லப்பு

[மலாயன் பென்சனியர்]

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் மாட்டின் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பி. செல்லப்பு நேற்றுக் காலமானார்.

இவர் மங்களநாயகியின் அன்புக் கணவரும், ஜெகராஜா, ஜோதிமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அருள்நாயகம், ஜோசெப்பின் சந்திரா ஆகியோரின் மாமனாரும், அருள்மதி, விநோதா, நவீனன், விசித்திரன், நளினா, தர்மகுலசிங்கம், மனோகரன் ஆகியோரின் பேரனாரும், கைலின், திவ்யா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பிற்பகல் 3. 30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சு. தர்மகுலசிங்கம்
(பேரன்)

12A, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

## புதுமை மாதா திருவிழா

குருநகர், பெப். 3

புதுமை மாதா தேவாலய திருநாள் இன்று வெள்ளி காலை யாழ்-ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியை ஆயர் நடத்துவார்.

அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெறும். (இ-51)

## வங்கிகள் அரை நாள் விடுமுறை

யாழ்ப்பாணம், பெப். 3

இன்று வெள்ளிக்கிழமை இலங்கை வங்கிக்கு அரை நாள் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை வங்கிக் கிளைகளில் வாடிக்கையாளருக்கு இன்று காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை மட்டுமே வழமையான வங்கிச் சேவை நடைபெறும் என யாழ்ப்பாணம் பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

## பென்ஷன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடம் என்றால் 82 வீதம்—

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு வீதம் அதிகரித்து 30 வருடம் என்றால், 90 வீதம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. [ஒ]

## வாகன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இந்நிலைமையினால் பல வாகன ஓட்டுநர்கள் வீதி ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காமலும், பாதசாரிகளில் கவனம் செலுத்தாமலும் வாகனங்களை ஓட்டுவதினால் பல வீதி விபத்துக்களை நாளாந்தம் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளார்கள்.

இவ்வீதி விபத்துக்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும், கடப்பாடும் மோட்டார் வாகன ஓட்டுநர்களையே சாரும்.

இவ்வாறான சூழ்நிலை தொடர்ந்தும் இருக்காவண்ணம் இதனை ஓர் நிறுவன ரீதியான செயற்பாட்டின் கீழ் கொண்டு வந்து அதற்கான ஒழுங்கமைப்புக்களைச் செய்வதற்கும் அதனைச் செயற்படுத்துவதற்கும் தமிழீழ நிர்வாக சேவையில் மோட்டார் வாகனச் சாரதிக்கான அனுமதி வழங்கும் பிரிவு ஒன்று எதிர்வரும் 1995 – 02 – 15 ஆம் நாள் தொடக்கம் செயற்படவுள்ளது

இதன் செயற்பாடானது தமிழீழத்திற்குள் சொந்தத்தில் மோட்டார் வாகனம் வைத்திருப்பவர்களுக்கும், ஊதியத்திற்கு வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும், திணைக்களங்கள், நிறுவனங்களின் வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும், சகல வகுப்பு வாகனங்களை ஓட்டுபவர்களுக்கும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறைகளைச் செய்யும்.

இதற்கான சகல ஆவணங்களையும் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சகல ஆவணங்களையும் பெற்று பூரணப்படுத்தியதன் பிறபாடு வைத்திய பரிசோதனை உட்பட) சம்பந்தப்பட்ட ஒ... வாகனங்களை செலுத்துவதற்கான சாரதிப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு ஒருமாதத்தின் பிற்பாடு ...ப்பட்டவருக்கு வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

தமிழீழ நிர்வாக சேவையில் மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதி வழங்கும் பிரிவு ஆரம்பித்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சகல வகுப்பு வாகனங்களையும் ஓட்டுபவர்கள் வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டும்.

இக்குறிப்பிட்ட காலத்துக்குள் சகல வகுப்பு வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறத் தவறும் வாகன ஓட்டுநர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்புபவர்கள் 1995-02-15 நாள் தொடக்கம் செயலக நேரங்களில் அதற்குரிய பொறுப்பாளர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

றோட்டறிக் கழக ஆதரவுடன்
# தடகளப் போட்டிகள் சனி, ஞாயிறு நடக்கும்
## யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் நடத்தும் யாழ். மாவட்ட தடகளப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் [சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்] காலை 9.00 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில் 175க்கு மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். "மினி ஒலிம்பிக்ஸ்" போன்று இப்போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமையிலான குழுவினர் செய்துவருகின்றனர்.

ஞாயிறு மாலை நடைபெறும் நிறைவுநாள் நிகழ்ச்சிகளின்போது பிரதம விருந்தினராக முன்னாள் இலங்கை மெய்வல்லுநர் வீரரும், உயரம் பாய்தலில் ஆசியசாதனை புரிந்தவரும், ஒலிம்பிக் வீரருமான கலாநிதி என். எதிர்வீரசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சி.இளம்பரிதி, யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஈ. சரவணபவன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

ஞாயிறு மாலையில் யாழ். நகரைச் சேர்ந்த பல்வேறு பாடசாலைகளின் பாண்ட் வாத்திய குழுக்களின் அணிவகுப்பும் சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழ காவல் துறையின் 'பாண்ட்' வாத்தியக் குழுவின் அணிவகுப்பும் இடம் பெறும். [ஒ]

# விவசாயபீட மாணவருக்கு போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சி விவசாய பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

வலிகாமக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்திலும், தென்மராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி பேருந்து நிலையத்திலும்—

வடமராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பிற்பகல் 2.00 மணிக்கு கொடிகாமம் பேருந்து நிலையத்திலும் ஒன்றுகூடுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர். [ஒ]

## தமிழ் இசைவிழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 3

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றின் தமிழிசை விழாவில் 3ஆம் நாள் நிகழ்வாக இன்று வெள்ளிக் கிழமை மாலை 5-30மணிக்கு மன்ற மாணவிகளின் பாட்டு வீணையிசை, 6.15 மணிக்கு சாரதா சச்சிதானந்தவின் பாட்டு, 7-15 மணிக்கு திரு. வீ.கே நடராசாவின் பாட்டு என்பன நடைபெறும். [க-111-14]

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 3மணிக்கு சுவாமி சித்ரூபானந்தா வழங்கும் 'அரைநிமிடம்' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும். (க-14]

## ஆலயங்களில்

யாழ் கந்தர்மடம்- அரசடி வீதி செல்வ நாகபூஷணி அம்மன் ஆலயகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

அதற்கு முன்பாக இன்று எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்காபிஷேகமும் மாலையில் திருவூஞ்சல், பெருந்தெரு வீதி உலா வருதல் என்பன இடம் பெற்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு திமிதிப்பு உற்சவமும் அபிஷேகமும் நடைபெறும். (இ-14)

# 6ஆம் மாத நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 – 01 – 1968
இறைவன் அடியில்: 10 – 08 – 1994

**தம்பிஐயா இரவிச்சந்திரன்**
திதி: 03 – 02 – 1995

ஆடிச்சதுர்த்தியில் ஆழ்கடலில்
அத்திலாந்திச் சமுத்திரத்தில் - பள்ளி கொண்ட
ஆருயிர் பிறவி அற்புத தெய்வமே!
வானில் நிலவும் முழுமதி நீயென
இரவிச்சந்திரனெனும் நாமம் பெற்று!
செவ்விதழும் சிரித்த முகமும்
குறு குறு நடையுடன்
சிட்டாய்ப் பறந்திடும் சின்னக் குழந்தையே!
தனக்கென வாழா பொது நல வாதியாய்
குடும்ப விளக்காய் ஒளி தந்தாயே!

எம் இனிய இராசாவே!
உமது ஆத்மா சாந்தியடைய
கைவிட்ட ஆனைமுகனையே
கை யேந்தி இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது மகனின் திடீர் மறைவைக் கேட்டறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர், நண்பர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து உதவி புரிந்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!
- குடும்பத்தினர்.

[சி-341]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org